1971 டிசம்பர் 13]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்தச் சங்கத்திற்கு மதுரையிலிருந்து கிருஷ்ணன் கோயில் வரை, அதாவது 64 கிலோமீட்டர் தூரம் அளவுக்கு ஒரு பஸ்ஸுக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனல், அந்தச் சங்கம் இன்னும் பஸ்ஸை கொண்டுவரவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிற போக்குவரத்து பஸ்கள் சரிவர , இயங்குவதில்லை. கொடுக்கப்படுகின்ற பஸ் ரூட்டுகள் விற்கப்படுகின்றன. அரசு இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். அன்ருடம் அரசு ஊழியர்கள் கண்காணித்து ஆண்டுமுடிந்ததும் வசூலைக் கணக்குப் பார்த்து, ஊழியர்களுக்கு லாபத்தை பகிர்ந்து தரப்படக்கூடிய முறையை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இது கூட்டுறவு நிர்வாகம் பற்றிய பிரச்னை. பல கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் இயங்கி லாபம் அடைகின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்து எந்த நிறுவனம் நஷ்டத்தில் நடக்கிறதோ தெரியவில்லை. முழுத் தகவல் கூட்டுறவுத் துறை அமைச்சரிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. மா. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, தமிழகத்தில், ஹரிஜன கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் எவ்வளவு இயங்கி வருகின்றன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிக் கேள்வி போடவும்.

மயிலைச் சித்திரக்குளம்.

*342. வின—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர், சித்திரக்குளத்தைச் சென்னை மாநகராட்சி குத்தகைக்கு எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) மைலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பேயாழ்வார் தேவஸ்தானங்களின் அறங்காவலர்கள் சித்திரக் குளத்தை சென்னை மாநகராட்சிக்கு 14—10—1953 முதல் 99 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு குத்தகை விட்டிருக்கிறர்கள்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, சித்திரக் குளம் தூர் வாரப்படாமல், நாற்றம் அடித்துக்கொண்டு சுகாதாரத்திற்குக் கேடான முறையில் இருக்கிறது. உடனடியாக தமிழக அரசு மாநகராட்சிக்கு இதைச் சுத்தப்படுத்துமாறு உத்திரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இக் குளத்தை மாநகராட்சிக்கு விட்டதன் நோக்கமே, இதைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான். மாநகராட்சி, குத்தகை விடும்போது, சில முக்கியமான விதிகளை விதிக்கிறார்கள். குத்தகை விதிகளில், நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. ஆகவே, குளம் அசுத்தமாக வைக்கப்பட்டிருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், குத்தகை விதிகளின் படி குளத்தை குத்தகைக்காரர்கள் சுத்தமாக வைத்துக்கொள்ளாத காரணத்தால், அறங்காவலர்கள், அந்தக் குத்தகையை ரத்து செய்து அந்தக் குத்தகையை மீண்டும் வேறொருவருக்கு அந்தப் பொறுப்பைக் கொடுக்கும்படியான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, குளம் தூய்மையாக வைக்கப்படாமல் இருந்தால், மாநகராட்சியிடம் கூறலாம். அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்க வில்லை என்றால் அது பற்றி யோசிக்கலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தக் குளத்தினால் யாருக்கும் நன்மை இல்லை. கார்ப்பரேஷனுக்கோ, அரசுக்கோ வருமானம் இல்லை. மேலும், இந்தக் குளம் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. ஆகவே, குளம் யாருக்கும் பிரயோசனம் இல்லை என்ற காரணத்தால், அதை மூடி, அந்த இடத்தில் வீடுகள் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கோயிலுக்கு வருமானம் வர வேண்டும் என்றால், குளம் தேவைப்படுகிறது.

**திரு. எம். ஆர். கண்ணன் :** தலைவரவர்களே, பெரும்பாலான கோயில் குளத்தில் யாரும் குளிப்பதில்லை. இம்மாதிரி குளங்கள் உண்மையிலேயே யாருக்கும் பயன்படுவதில்லை. என்னுடைய தொகுதியில் கிருஷ்ணப்ப நாயகர் குளம் இருக்கிறது. இது வறண்டிருக்கிறது. பாழாக இருக்கிறதே தவிர, இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே, சர்க்கார், உபயோகமில்லாத குளங்களை மூடி, அந்த இடத்தை வீடு கட்டுவதற்கோ, பூங்காக்களாக்குவதற்கோ உபயோகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 டிசம்பர் 13]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அக் குளத்தில், ஆண்டுதோறும் தெப்போற்சவம் நடைபெறுகிறது. எனவே, தெப்போற்சவத்திற்கு அது பயன்படுகிறது. எதற்கும் பயன்படவில்லை என்று சொல்வது தவறு.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குளத்தை வெட்டுவது கஷ்டம். தூர்ப்பது எளிது. வெட்டப்பட்ட குளங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல், தண்ணீர் வரத்துக்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாக் குளங்களையும் தூர் வாரி, செப்பனிடப்பட்டு, தண்ணீர் வரத்துக்கள் சரியான முறையில் திறந்துவிடப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அப்படி எந்த எந்தக் குளங்கள் செப்பனிடப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் பரிசிலனை செய்து, தூர் எடுத்து, தூய்மைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

### கோவை, திருப்பூர் நகரங்களுக்குப் பால் வழங்கல்

*343. **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் குறைந்த விலைக்கு நல்ல பால் தரும் திட்டத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இல்லை.

**திரு. சு. துரைசாமி:** கோவை, திருப்பூர் போன்ற நகரங்கள் தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற பகுதி, அங்கே சத்து உணவுத் திட்டத்தின்கீழ் உணவுப் பொருள் வருவதுபோலவே கோயம்புத்தூர், திருப்பூர் போன்ற இடங்களில் மலிவான விலையில் பால் கொடுக்க முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** மலிவான விலையில் பால் வழங்குகிற திட்டம் மதுரையில் செயல்பட்டு வருகிறது. யுனிசெப் மூலம் இயந்திரங்களை வாங்கி அங்கே வைத்திருக்கிறோம். அவர்கள் இயந்திரம் கொடுக்கும்போது போட்ட விதிக்கிணங்க அங்கே மலிவுவிலையில் பால்வழங்கப்படுகிறது. ஆனால் கோவை, திருப்பூர் போன்ற இடங்களில் இப்போது உள்ள இயந்திரங்களே போதுமானதாக இருக்கிறது. ஆகவே யுனிசெப் உதவியை நாடுவதாக இல்லை.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதியில் பால் அதிகமாக உற்பத்தியாகிறது. அந்தப் பாலை சரியான முறையில் வாங்குவதற்கு வியாபாரிகள் இல்லாததால் அரசாங்கமே மில்க்போர்டு அமைத்து அதன்மூலம் அங்கு உற்பத்தியாகிற பாலை வாங்க முன்வருவார்களா?